சி.சி. 721/2019

**குறுக்கு விசாரணை**
**அ.சா.1 ராகேஸ்**

நான் ஸ்ரீ அஸ்வதி பைனான்ஸ் என்ற நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன். மேற்படி நிதிதி நிறுவனத்தை என்னுடைய வீட்டில் நடத்தி வருகிறேன். உரிமமம் என்து பெயரில் உள்ளது. நான் அந்த நிறுவனத்தை கடந்த எட்டு வருடங்களாக நடத்தி வருகிறேன். நிதி நிறுவனம் என்றால் எந்த வகையான நிதி செய்வீர்கள் என்றால் நகை கடன் கொடுப்பேன். மணி லெண்டர் லைசன்ஸ் எனக்கு இல்லை. ஆஜர் எதிரி எனது நிதி நிறுவனத்தின் வாடிக்கையாளர். ஆஜர் எதிரி எனது நிறுவனத்தில் நகை அடகு வைத்துள்ளார். அவர் எந்த வருடத்தில் நகை அடகு வைத்தார் என்றால் எனக்கு அதுகுறித்து ஞாபகம் இல்லை. எவ்வளவு பணத்திற்கு அடகு வைத்தார் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை முறை அடகு வைத்துள்ளார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நகை அடகு வைப்பது சம்மந்தமாக கணக்கு வழக்குகள் பராமரித்து வருகிறேன். வருடத்திற்கு ஒரு முறை தனிக்கை செய்யப்படும். எதிரி உங்களிடம் நகை அடகு வைத்தார் என்பதை காட்டுவதற்கு லெட்ஜர் தாக்கல் செய்யலாமா என்றால் எதிரி 2018 ஆம் ஆண்டு நகை அடகு வைத்திருந்தால் தாக்கல் செய்யலாம். எதிரி 2018 ஆம் வருடம் நான்கு முறை 1,35,000/- ரூபாய்க்கு நகை அடகு வைத்து பணம் வாங்கினார் என்றால் சரிதான். எங்களிடம் நகை அடகு வைத்தால் வாடிக்கையாளருக்கு நகை அடகு வைத்ததற்கான அட்டை கொடுப்போம். வாடிக்கையாளர்கள் உங்களிடம் ஒரு கிராமிற்கு அரசு நிர்ணயித்த தொகையைவிட அதிகமாக கேட்டால் நகை அட்டை கொடுக்கமாட்டீர்கள் என்றால் சரியல்ல பணம் கொடுக்கமாட்டோம், நகை அடகு வைத்து ஒரு வருட காலத்திற்குள் மீண்டு கொள்ள வேண்டும் இல்லை என்றால் அறிவிப்பு அனுப்புவோம். ஒரு வருடம் கழித்து நேரடியாக எழுத்து மூலமான அறிவிப்பைதான் கொடுப்போம், ஆஜர் எதிரிக்கு அவ்வாறு எழுத்து பூர்வமான அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரி வீட்டிற்கும் எனது நிதி நிறுவனத்திற்கும் 100 அடிக்குள் இருக்கும். நான் ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லும் நேரத்தில் எதிரியுடன் யார் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் வந்தார் வேறு யாரும் வரவில்லை. எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் பணம் குறித்து பதிவேடுகள் எழுதி வைக்கவில்லை. வட்டி எதுவும் தருவது குறித்து சொல்லவில்லை. பணத்தை நான் ரொக்கமாக தான் கொடுத்தேன். நீங்கள் மேற் சொன்ன ரொக்கமாக

கொடுத்த பணத்தை கையில் இருந்து கொடுத்தீர்களா வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தீர்களா என்றால் கையில் இருந்து தான் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1ல் யார் எழுதினார்கள் என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள எழுத்துக்களும் தேதியும் வெவ்வேறு பேனாவால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் கையொப்பம் வேறு பேனாவால் போடப்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி உங்களது பக்கத்து வீட்டுகாரர் என்றும் 2018 ஆம் வருடம் நகை அடகு வைத்திருந்தார் என்றும், அவர் வைத்த நகைகளை குறிப்பிட்ட காலத்திற்கு திருப்ப முடியவில்லை என்றும், ஆகவே நீங்கள் எதிரியை அனுகி நகையை திருப்பும்படி சொன்னீர்கள் என்றும் எதிரி அவரிடம் பணம் இல்லை என்றும், நகையை விற்று பணத்தை எடுத்துக் கொள்ளுமாறும், மீதம் உள்ள பணத்தை எதிரிக்கு தருமாறு உங்களிடம் சொன்னார் என்றால் சரியல்ல. இவ்வாறு நகையை விற்று பணம் ஆக்கவேண்டும் என்றால் அதற்கு செக்யூரிட்டியாக ஒரு நிறப்பப்படாத கசோலையை கேட்டீர்கள் என்றால் சரியல்ல. எதிரி நீங்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க தாக்கல் செய்த காசோலை தான் நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரி செக்யூரிட்டிக்காக கொடுத்த நிரப்பப்படாத காசோலையில் கையெழுத்துக்கள் மற்றும் எழுத்துக்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் மற்றும் எதிரியும் சேர்ந்து மேற்படி 2018 ஆம் வருடம் அடகு வைத்த நகையை இரணியல் நகைகடையில் விற்றீர்கள் என்றால் சரியல்ல. அப்படி விற்ற தொகையில் அசல் மற்றும் வட்டியும் சேர்த்து பார்த்ததில் எதிரி உங்களுக்கு ரூபாய் 7,600/ தரவேண்டி இருந்தது என்றால் சரியல்ல. எதிரி உங்களிடம் காசோலையை கேட்ட போது ரூபாய் 7,600 யை பெற்று காசோலையை பெற்று செல்லுமாறு தெரிவித்தீர்கள் ன்றால் சரியல்ல. ஆஜர் எதிரி வழக்கு காசோலை வைத்துள்ளது குறித்து ஊர் நிர்வாகத்திடம் சொன்னார் என்றால் சரியல்ல. அவ்வாறு எதிரி ஊர் நிர்வாகத்திடம் சொன்னதால் ஆஜர் எதிரிக்கும் உங்களுக்கும் கோபம் வந்தது என்றும், அதனால் எப்படியாவது எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எதிரியிடம் கேட்டீர்களா என்றால் நான் போன் செய்து எதிரி எடுக்கவில்லை. நான் நேரில் சென்று எதிரியிடம் பணம் கேட்டால் அவர் என்னை தப்பாக பேசுவார். காசோலை மதிப்பிழந்த விபரத்தை எதிரியிடம்

சொன்னீர்களா என்றால் நான் சொல்லவில்லை. ஆஜர் எதிரி நகை வைத்து உங்களிடம் இருந்து பெற்ற தொகையை தவிர்த்து வேறு எந்த தொகையையும் அவர் வாங்கவில்லை என்றால் சரியல்ல நீங்கள் சொல்வது போல் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் நீங்கள் பராமரிக்கும் பதிவேட்டி பதிவு செய்து இருப்பீர்கள் என்றும், நீங்கள் சொல்வது போல் பணம் கொடுக்காததால் தான் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி உங்களிடம் நகையை விற்பதற்காக செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலை தான் இந்த காசோலை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி உங்கள் வீட்டிற்கு வந்து பணம் வாங்கி மூன்று மாத காலத்திற்குள் தருவதாக சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு உங்களிடம் நகை அடகு வைத்ததை தவிர்த்து எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி செக்யூரிக்காக நிரப்பப்படாத கொடுத்த காசோலையை பயன்படுத்தி உங்களுக்கு தெரிந்த நபரிடம் கொடுத்து வசூலுக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள எழுத்துக்கள், தேதிகளுக்கு ஆஜர் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும், நீங்களும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் செக்யூரிட்டிக்காக நம்பிக்கையின் அடிப்படையில் வழக்கு காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணை சொன்ன சங்கதிகளை வழக்கிற்காக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.